பத்திரிகையில் உண்மையான விஷயங்களைப் போடும்படி செய்வார்களா? அமைச்சர் அவர்கள் அப்படிப் பத்திரிகையில் போட்டது தவறு என்றுவது சொல்லவேண்டும். அமைச்சர் போய் பார்த்தால் நன்றாக நடக்கும் என்று நினைத்தோம். இப்போதுதான் அவர் போகவில்லை என்று தெரிகிறது.

Music Teacher Post.

* 84 *Q*.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the post of the Music Teacher in the Savithiri Vidyasala Hindu Girls' High School, Tiruchirappalli, has been declared a "surplus" one and abolished; and

(*b*) if so, the details thereof?

இசை ஆசிரியைப் பதவி

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள சாவித்திரி வித்யாசாலை இந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலுள்ள இசை ஆசிரியைப் பதவி உபரியென அறிவித்து நீக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) & (இ) இப்பள்ளியின் இசை ஆசிரியர் பதவிகள் நான்கில் ஒரு பதவி மிகுதியாக இருந்தது. அப்பதவி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென பள்ளி நிர்வாகிகள் செய்துள்ள முறையீடு ஆய்வில் உள்ளது.

Ex-District Board Headmasters.

* 85 *Q*.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Ex-District Board Headmasters' Association has made a request for treating the Ex-District Board teachers as Government Officials; and

(*b*) whether the Association has requested the Government to convert the posts of Headmasters into Gazetted Officers?

முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) முன்னாள் மாவட்ட வாரிய தலைமை ஆசிரியர்கள் சங்கம் முன்னாள் மாவட்ட வாரிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும்படி வேண்டுகோள் விடுத்ததா?